# October 8, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. குஜராத் முதல்வர், நாட்டின் பிரதமர் என அரசின் தலைவராக தங்குதடையின்றி 25 ஆண்டுகளை புதன்கிழமை நிறைவு செய்தார் பிரதமர் நரேந்திர மோடி.

(i) குஜராத் முதல்வராக கடந்த 2001, அக்.7-ஆம் தேதி பதவியேற்ற பிரதமர் மோடி, கடந்த 2014, மே மாதம் நாட்டின் பிரதமராகும் வரை அந்தப் பதவியில் நீடித்தார். தற்போது மூன்றாவது முறையாக பிரதமராக பதவிவகித்து வரும் அவர், அரசின் தலைவராக (அக்.7) 25 ஆண்டுகளை நிறைவு செய்தார்.

2. நடப்பாண்டு வேதியியலுக்கான நோபல் பரிசுக்கு பிரான்ஸைச் சேர்ந்த ஹென்றி பி.ககன், ஜப்பானைச் சேர்ந்த கென்சோ சோய் ஆகிய இரு விஞ்ஞானிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

(i) வேதியியலில் புதிரான 'கண்ணாடி-பிம்ப மூலக் கூறுகள்' குறித்த ஆய்வுகள் மற்றும் தீர்வு முயற்சிகளுக்காக இருவருக்கும் இந்த உயரிய பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. 'கண்ணாடி-பிம்ப மூலக்கூறுகள்' எனப்படுபவை தோற்றத்தில் ஒரே போல் இருந்தாலும், ஒன்றன் மீது மற்றொன்று கச்சிதமாக பொருத்த முடியாத மூலக்கூறுகளாகும். இத்தகைய மூலக்கூறுகளின் புதிரான வேதிவினைகளுக்கு தீர்வு காணும் ஆய்வுகளில் இரு விஞ்ஞானிகளும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை நல்கியுள்ளனர்.

(ii) இது தொடர்பாக வேதியியலுக்கான நோபல் குழுவின் தலைவர் ஹெய்னர் லின்கே கூறுகையில், 'ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நிலவிய வேதிவினை சார்ந்த புதிருக்கு ஹென்றி ககன் மற்றும்கென்சோசோய் ஆகியோரின் ஆய்வுகள் தீர்வாக அமைந்துள்ளன. அதாவது, மூலக்கூறுகளின் நேரியல் தன்மை எவ்வாறு தன்னிச்சையாக உருவாகிறது என்ற புதிருக்கு இருவரின் ஆய்வுகளும் தீர்வை வழங்கியுள்ளன. இவர்கள் உருவாக்கிய வேதி வினைகள் பிரமிக்க வைப்பவை' என்றார்.

(iii) 95 வயதான ஹென்றிபி.ககன், பிரான்ஸில் பிறந்தவர், பிரான்சின் ஓர்சேவில் உள்ள பாரிஸ்-சுட் பல்கலைக்கழக பேராசிரியராக பணியாற்றியவர். ஜப்பானில் பிறந்தவரான கென்சோ சோய், டோக்கியோ அறிவியல் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணிபுரிந்தவர்.

(iv) முன்னதாக, நடப்பாண்டு மருத்துவத்துக்கான நோபல் பரிசு கடந்த திங்கள்கிழமையும், இயற்பியலுக்கான நோபல் பரிசு கடந்த செவ்வாய்க்கிழமையும் அறிவிக்கப்பட்டது. இலக்கியம், அமைதி மற்றும் பொருளாதாரத்துக்கான நோபல் பரிசுகள் அடுத்தடுத்து அறிவிக்கப்பட உள்ளன.

3. ஜெர்மன் நாட்டில் தொடங்கியுள்ள சர்வதேச புத்தகக் காட்சியில் தமிழக அரசின் சார்பில் பிரத்யேக அரங்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(i) உலகப்புகழ் பெற்ற பிராங்பர்ட் சர்வதேச புத்தக காட்சி ஜெர்மனியின் பிராங்க்பர்ட் நகரில் புதன்கிழமை தொடங்கியது. தொடர்ந்து, அக்.11 வரை நடைபெறும் இந்தப் புத்தகக் காட்சியில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகமும், பொது நூலக இயக்ககமும் இணைந்து சென்னை சர்வதேச புத்தகக் காட்சியின் பிரத்யேக அரங்கை அமைத்துள்ளன.

4. அகதிகளைத் திருப்பி அனுப்புவது குறித்து மலேசிய பிரதமருடன் பேச்சு நடத்துவதற்காக, மியான்மர் அதிபர் மின் ஆங் லயிங் மலேசியா சென்றடைந்தார்.

5.சர்வதேச அமைதிக்கான பங்களிப்பைப் பாராட்டி, ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸுக்கு பாகிஸ்தானின் உயரிய 'நிஷான்-ஏ-இம்தியாஸ்' விருதை அந்நாட்டு அதிபர் ஆசி்ப் அலி சர்தாரி வழங்கி கௌரவித்தார்.

6. இந்தியாவின் பாதுகாப்புத் தேவைகள், ஒழுங்குமுறை விதிமுறைகளை முழுமையாகப் பூர்த்தி செய்யும் வகையில், தங்களின் சேவைகள் பிரத்யேகமாக கட்டமைக்கப்பட்டுள்ளதாக 'ஸ்டார்லிங்க்' செயற்கைக்கோள் தகவல் தொடர்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

(i) மேலும், ஒவ்வொரு நிலையிலும் உரிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதுடன், இந்தியப் பயனர்களின் தரவுகள் உள்நாட்டிலேயே பாதுகாக்கப்படும் என்றும் அந்நிறுவனம் உறுதியளித்துள்ளது.

(ii) இந்தியத் தொலைத் தொடர்பு நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் ஸ்டார்லிங்க் வணிக செயல்பாடுகள் பிரிவின் துணைத் தலைவர் லாரன் ட்ரேயர் இது குறித்து மேலும் கூறுகையில், 'இந்தியச் சந்தைக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில், நாங்கள் ஏற்கெனவே முதலீடு செய்துள்ளோம். அந்தவகையில், இங்கு சேவை வழங்க நாங்கள் தயார்நிலையில் உள்ளோம். இந்தியாவின் பாதுகாப்புத் தேவைகளுக்கு ஏற்பவே எங்களின் செயல்பாடுகளைப் பிரத்யேகமாக வடிவமைத்துள்ளோம்' என்றார்.

(iii) இந்தியாவில் செயற்கைக்கோள் மூலம் இணையச் சேவையை வழங்குவதற்காக ஸ்டார்லிங்க் உள்பட 3 நிறுவனங்களுக்கு மத்திய அரசு ஏற்கெனவே உரிமம் வழங்கியுள்ளது. எனினும், அலைக்கற்றை ஒதுக்கீடு மற்றும் இறுதிப் பாதுகாப்பு அனுமதி கிடைத்த பின்னரே இச்சேவைகள் அதிகாரபூர்வமாகத் தொடங்கப்படும்.

7. ஆர்ஜென்டீனா கால்பந்து நட்சத்திரம் லயனல் மெஸ்ஸி தேசிய அணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்ட நிலையில், அந்த அணிக்கான தனது 'பிரியா விடை' ஆட்டத்தில் புதன்கிழமை விளையாடினார். நட்பு ரீதியிலான இந்த ஆட்டத்தில் ஆர்ஜென்டீனா 3-0 கோல் கணக்கில் பெனின் அணியை வீழ்த்தியது.

8. இந்தியாவும், ஆப்பிரிக்காவும் இணைந்து சவால்களை எதிர்கொள்ள வேண்டும் என்று வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் அழைப்பு விடுத்துள்ளார்.

(i) ஆப்பிரிக்க நாடான கானாவில் முதல் முறையாக ஜெய்சங்கர் சுற்றுப்பயணம் செய்து வருகிறார். அங்கு அவர், கானா நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் சாம் அப்லாக் வாவை சந்தித்து இருதரப்பு விவகாரங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். பின்னர் இருவர் முன்னிலையிலும் வேளாண் ஆராய்ச்சி, கல்வி உள்ளிட்ட துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

(ii) 15 ஆப்பிரிக்க நாடுகள் கூட்டுச் சேர்ந்து, மேற்கு ஆப்பிரிக்க நாடுகளுக்கான பொருளாதார கூட்டமைப்பு எனும் அமைப்பை ஏற்படுத்தியுள்ளன. இதன் நிறுவன உறுப்பினராக கானா உள்ளது. மேலும் ஆப்பிரிக்க யூனியன் அமைப்பின் தலைவராக அடுத்த ஆண்டு கானா பொறுப்பேற்க உள்ளது. கானாவில் கடந்த ஆண்டுஜூலை மாதம் பிரதமர் மோடி முதல்முறையாக பயணம் மேற்கொண்டார்.

(iii) இந்த பயணமானது, 30 ஆண்டுகளில் கானாவுக்கு சென்ற முதல் இந்திய பிரதமர் எனும் முக்கியத்து வத்தை அளித்தது.

9.RBI ரெப்போ வட்டி விகிதத்தை உயர்த்தியது

(i) முக்கிய கொள்கை முடிவு

- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ரெப்போ வட்டி விகிதத்தை 25 அடிப்படைப் புள்ளிகள் (0.25%) உயர்த்தி, 5.25%-லிருந்து 5.50% ஆக அதிகரித்துள்ளது.
- ரெப்போ வட்டி விகிதம் என்பது வணிக வங்கிகளுக்கு RBI குறுகிய காலக் கடன்களை வழங்கும் வட்டி விகிதமாகும்.
- மும்பையில் நடைபெற்ற கூட்டத்தில் நிதிக் கொள்கைக் குழுவின் (MPC) 6 உறுப்பினர்களும் பங்கேற்று, வட்டி விகித உயர்வுக்கு ஒருமனதாக ஒப்புதல் அளித்தனர்.
- RBI கடைசியாக 2023 பிப்ரவரியில் ரெப்போ வட்டி விகிதத்தை 0.25% உயர்த்தியது. அதன்பின்னர் சுமார் மூன்றரை ஆண்டுகள் வட்டி விகிதத்தை மாற்றாமல் வைத்திருந்தது. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட வட்டி விகிதக் குறைப்புகளின் மூலம் ரெப்போ வட்டி விகிதம் 5.25% ஆகக் குறைக்கப்பட்டது.
- RBI ஆளுநராக சஞ்சய் மல்ஹோத்ரா 2024 டிசம்பரில் பதவியேற்றார். அவரது பதவிக்காலத்தில் ரெப்போ வட்டி விகிதம் உயர்த்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.

(ii) காரணம் மற்றும் கடன் பெறுவோர் மீதான தாக்கம்

- உள்நாட்டில் அதிகரித்து வரும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக முக்கியமாக இந்த வட்டி விகித உயர்வு மேற்கொள்ளப்பட்டது.
- வீட்டு, வாகன மற்றும் பிற தனிநபர் கடன்களுக்கான வட்டி விகிதங்களை வணிக வங்கிகள் உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- ரெப்போ வட்டி விகிதத்துடன் நேரடியாக இணைக்கப்பட்ட கடன்களைப் பெற்றுள்ளவர்களுக்கு, இந்த உயர்வின் காரணமாக EMI செலுத்தும் காலம் நீடிக்கலாம் அல்லது மாதாந்திர வட்டி செலவு அதிகரிக்கலாம்.

(iii) பொருளாதார முன்னறிவிப்புகள் மற்றும் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகள்

- உலகளாவிய அளவில் தொடர்ந்து நிலவும் நிச்சயமற்ற சூழலுக்கு மத்தியிலும், உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் பாதிப்பின்றி தொடர்ந்து வருகின்றன.
- உண்மையான GDP வளர்ச்சி கணிப்புகள்:
    - 2026–27 நிதியாண்டு முதல் காலாண்டு: 7.1%
    - 2026–27 இரண்டாம் காலாண்டு: 7.2%
    - 2026–27 மூன்றாம் காலாண்டு: 6.9%
    - 2026–27 நான்காம் காலாண்டு: 6.8%
    - 2027–28 முதல் காலாண்டு: 7.1%
- நடப்பு நிதியாண்டுக்கான சில்லறைப் பணவீக்கக் கணிப்பு, 5%-லிருந்து 5.2% ஆக உயர்த்தப்பட்டுள்ளது. உணவுப் பொருள்கள் மற்றும் எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட கணிசமான உயர்வே இதற்குக் காரணமாகும்.
- Merchant Discount Rate (MDR) மூலம் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சிறிய அளவிலான கட்டணம், UPI பரிவர்த்தனைகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. இதுவரை UPI பரிவர்த்தனைகளின் எண்ணிக்கையிலும் எந்தக் குறைவும் ஏற்படவில்லை.

10.ஹைதராபாதில் புதிய வளாகம் அமைப்பதற்கான பல்கலைக்கழக மானியக் குழுவின் (யுஜிசி) விருப்பக் கடிதத்தை அமெரிக்காவின் கொலராடோ டென்வர் பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

(i) இதன் மூலம் இந்தியாவில் பட்டப் படிப்புகளை வழங்கும் வளாகத்தை அமைக்க அனுமதி பெற்றமுதல் அமெரிக்க அரசு பல்கலைக்கழகம் என்ற பெருமையை இந்த பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

(ii) கடந்த ஆண்டு, அமெரிக்காவின் சிகாகோவில் உள்ள இல்லினாய்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் இந்தியாவில் வளாகம் அமைத்த முதல் அமெரிக்க தனியார் பல்கலைக்கழகம் என்ற பெருமையைப் பெற்றது. மும்பையில் அமைந்துள்ள இந்த வளாகத்தில் கடந்த செப்டம்பர் முதல் மாணவர் சேர்க்கை தொடங்கியது.

(iii) இதனிடையே, கொலராடோ டென்வர் பல்கலைக்கழகத்தின் ஹைதராபாத் வளாகம், முதல் அமெரிக்க அரசு பல்கலைக்கழக வளாகம் என்பதோடு, தெலங்கானாவில் அமையவுள்ள முதல் வெளிநாட்டுப் பல்கலைக்கழக வளாகமாகவும் இருக்கும்.

11. அனைவருக்கும் அமைதியையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தும் வகையில் சுதந்திரமான, வெளிப்படையான மற்றும் விதிகள் அடிப்படையிலான உலகளாவிய கடல்சார் அமைப்பு முறை உருவாக்கப்பட வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார். 'சாகர்மந்தன்-தி ஓஷன் டயலாக்' நிகழ்ச்சியில் பிரதமர் மோடியின் உரையை வாசித்த கப்பல் போக்குவரத்துத் துறைச் செயலர் விஜய் குமார் கூறியதாவது:

- கடல்கள் அனைவருக்கும் பகிரப்பட்ட வளமாக மாற வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு. ஒவ்வொரு நாட்டுக்கும் அதில் கருத்து தெரிவிக்கவும், வளர்ச்சிக்கான வாய்ப்பைப் பெறவும் உரிமை இருக்க வேண்டும்.
- இந்தியா தற்போது கடலைப் புதிய நோக்கத்துடனும் உறுதியுடனும் அணுகி வருகிறது. நாட்டின் முக்கிய துறைமுகங்களின் கையாளும் திறன் கிட்டத்தட்ட இரு மடங்காக அதிகரித்துள்ளது. அதேவேளையில், கப்பல்கள் துறைமுகங்களில் தங்கும் காலமும் கணிசமாகக் குறைந்துள்ளது. உலக அளவில் இந்திய மாலுமிகளின் எண்ணிக்கை இரண்டாவது பெரியதாக உள்ளது.
- கடலுடனான இந்தியாவின் உறவு தொன்மையானது. பண்டைய துறைமுக நகரமான லோத்தல் தொடங்கி, சோழர் காலம் வரையிலும், மராட்டிய மன்னர் சத்ரபதி சிவாஜி மகாராஜின் கடற்படைவரையிலும் இந்தியாவின் கடல்சார் பாரம்பரியம் நீண்டுள்ளது.

12.லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தயாராவோம்

(i) ஒட்டுமொத்த செயல்பாடு மற்றும் பதக்கப் பட்டியல்

- ஜப்பானின் ஐச்சி–நகோயாவில் அண்மையில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா ஒட்டுமொத்தப் பதக்கப் பட்டியலில் 4-ஆவது இடத்தைத் தக்கவைத்துக் கொண்டது.
- இந்திய அணியினர் மொத்தம் 85 பதக்கங்களை வென்றனர். இதில் 21 தங்கம், 27 வெள்ளி, 37 வெண்கலப் பதக்கங்கள் அடங்கும்.
- 2023-ஆம் ஆண்டு ஹாங்சோ ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா 106 பதக்கங்களை (28 தங்கம், 38 வெள்ளி, 40 வெண்கலம்) வென்றிருந்த நிலையில், தற்போது அதைவிட 21 பதக்கங்கள் குறைவாகப் பெற்றுள்ளது.
- மொத்தம் 495 இந்திய வீரர், வீராங்கனைகளில் 310 பேர் முதன்முறையாக ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்றவர்கள்.
- இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் தலா 38 பதக்கங்களை வென்றன.

(ii) வரலாற்றுச் சாதனைகள் மற்றும் குறிப்பிடத்தக்க வீரர்கள்

- இந்திய மகளிர் ஹாக்கி அணி: பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற சீன அணியை வீழ்த்தி, 44 ஆண்டுகளுக்குப் பிறகு ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றது.
- கும்கும் மொஹோத்: இனிப்பு பொட்டலம் விற்பனை செய்யும் தொழிலாளியின் 17 வயது மகளான இவர், வில்வித்தை ரிகர்வ் பிரிவில் தங்கம் வென்ற முதல் இந்தியப் பெண் என்ற சாதனையைப் படைத்தார்.
- நீரு தந்தா: ஹரியாணா விவசாயியின் மகளான இவர், தனிநபர் டிராப் துப்பாக்கிச் சுடுதல் பிரிவில் தங்கம் வென்ற முதல் இந்தியப் பெண் என்ற பெருமையைப் பெற்றார். இவர் வெற்றி பெற்றபோது, அவரது தாயார் நியாய விலைக் கடையில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களுக்கான (BPL)

கோதுமையை வாங்கிக் கொண்டிருந்தார். இவரது வீட்டில் தொலைக்காட்சி அல்லது ஸ்மார்ட்போன் கூட இல்லாத நிலையில், அவரது சாதனையைப் பார்க்க முடியாத சூழல் இருந்தது.

- வித்யா ராம்ராஜ்: கோயம்புத்தூர் அருகேயுள்ள வாலுக்குப்பாறை, மீனாட்சிபுரத்தைச் சேர்ந்த லாரி ஓட்டுநரின் மகளான இவர், 1 தங்கம், 1 வெள்ளி மற்றும் 1 வெண்கலப் பதக்கத்தை வென்றார். மேலும், 400 மீட்டர் தடை ஓட்டத்தில் பி.டி. உஷாவின் 42 ஆண்டுகால தேசிய சாதனையை முறியடித்தார்.
- சிகிதா சாஹில்: தெலங்கானாவைச் சேர்ந்த இந்த வில்வித்தை வீராங்கனை 2 தங்கப் பதக்கங்களை வென்றார். இவரது பயிற்சிக்காக அவரது தந்தை விவசாய நிலத்தை அடமானம் வைத்து, நெல் அறுவடை இயந்திரத்தையும் விற்றார்.
- மன்ப்ரீத் கவுர்: 36 வயதான குண்டு எறிதல் வீராங்கனையான இவர், தனது 14 வயது மகள் முன்னிலையில் வெண்கலப் பதக்கம் வென்றார். வறுமை, ஊக்கமருந்து தடைவிதிப்பு, காலில் ஏற்பட்ட எலும்பு முறிவு மற்றும் சிசேரியன் பிரசவம் உள்ளிட்ட சவால்களைக் கடந்து இந்த சாதனையைப் படைத்தார்.

(iii) தமிழக வீரர், வீராங்கனைகளின் சிறப்பான செயல்பாடுகள்

- தங்கப் பதக்கம்: வித்யா ராம்ராஜ் (மகளிர் 400 மீட்டர் தொடர் ஓட்டம்), கணேஷ் மணிரத்னம் (ஆடவர் காம்பவுண்ட் வில்வித்தை அணி) ஆகியோர் தங்கப் பதக்கம் வென்றனர். ஜி. கமலினி (மகளிர் கிரிக்கெட்), வாஷிங்டன் சுந்தர் (ஆடவர் கிரிக்கெட்) ஆகியோர் தங்கம் வென்ற அணிகளில் இடம்பெற்றிருந்தனர்.
- வெள்ளிப் பதக்கம்: வித்யா ராம்ராஜ் மற்றும் விஷால் டி.கே. ஆகியோர் கலப்பு 400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கம் வென்றனர்.
- வரலாற்றுச் சிறப்புமிக்க கம்பு தாண்டுதல் வெண்கலம்: பரணிகா இளங்கோவன், கம்பு தாண்டுதல் போட்டியில் இந்தியாவுக்காக ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் முதல் முறையாகப் பதக்கம் வென்றார்.
- வெண்கலப் பதக்கங்கள்: தமிழகத்தைச் சேர்ந்த மேலும் 9 வீரர், வீராங்கனைகள் பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் வெண்கலப் பதக்கங்களைப் பெற்றனர்.

(iv) பின்னடைவுகள் மற்றும் ஏமாற்றங்கள்

- டென்னிஸ் உள்ளிட்ட 16 விளையாட்டுப் பிரிவுகளைச் சேர்ந்த மொத்தம் 137 வீரர், வீராங்கனைகள் ஒரு பதக்கத்தைக்கூட வெல்லாமல் திரும்பினர்.
- 1986-ஆம் ஆண்டுக்குப் பிறகு முதல்முறையாக இந்தியா டென்னிஸ் போட்டியில் பதக்கம் ஏதுமின்றி திரும்பியுள்ளது.
- ராக்கெட் விளையாட்டுகளில் பின்னடைவு: பேட்மிண்டன் மற்றும் டேபிள் டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்ற 37 வீரர்கள் வெறும் 2 வெண்கலப் பதக்கங்களை மட்டுமே வென்றனர்.
- நட்சத்திர வீராங்கனைகளான பி.வி. சிந்து (பேட்மிண்டன்), மனு பாக்கர் (துப்பாக்கிச் சுடுதல்) ஆகியோர் பதக்கப் பட்டியலில் இடம்பெறவில்லை. நீரஜ் சோப்ரா காயம் காரணமாகப் போட்டிகளில் பங்கேற்கவில்லை.

- நீச்சல், ஜிம்னாஸ்டிக்ஸ், சைக்கிள் பந்தயம் போன்ற தனிநபர் விளையாட்டுப் பிரிவுகளில் கூடுதல் முயற்சியும் சிறந்த வியூகமும் தேவைப்படுகிறது.

(v) அரசின் செலவினம் மற்றும் எதிர்காலத் திட்டம்

- இந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கான பயிற்சி மற்றும் தயாரிப்புக்காக மத்திய அரசு கடந்த 4 ஆண்டுகளில் ₹703 கோடி செலவிட்டுள்ளது.
- அடுத்த 2 ஆண்டுகளில் குத்துச்சண்டை, மல்யுத்தம் போன்ற தனிநபர் விளையாட்டுகளிலும், ஹாக்கி போன்ற அணிவகை விளையாட்டுகளிலும் இந்தியா ஆதிக்கம் செலுத்தும் அளவுக்கு வீரர்களைத் தயார்படுத்த வேண்டும்.
- டேபிள் டென்னிஸில் சீனா, நீச்சலில் அமெரிக்கா, ஜூடோவில் ஜப்பான், வில்வித்தையில் தென் கொரியா ஆகிய நாடுகள் ஆதிக்கம் செலுத்துவதைப் போன்ற நிலையை இந்தியாவும் உருவாக்க வேண்டும்.
- அதன் பின்னரே ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான இலக்கை நோக்கி இந்தியா முன்னேற வேண்டும்.